# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, சிஹல சரண பின் கெட்டய நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஓகத்து மாதம் 07 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, சிஹல சரண பின் கெட்டய நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத் தப்பட்டது.]

ச.வ.ஓ. கூட். 24/2007

## சிஹல சரண பின் கெட்டய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

சிஹல சரண பின் கெட்டய என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான நம்பிக்கைப்பொறுப்பொன்று உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தியும் நிறைவேற்றியும் வரும் நோக்கத்திற்காக கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு வி.பி. திலகரத்ன அத்தாட்சிப்படுத்திய 2004, யூன் 8 ஆம் தேதிய 765 ஆம் இலக்கம் கொண்ட நம்பிக்கைப்பொறுப்பு உறுதியால் இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

அத்துடன் நம்பிக்கைப்பொறுப்பின் அலுவல்களும் குறிக்கோள்களும் இதுவரை வெற்றிகரமாக முகாமைசெய்யப் பட்டு வந்துள்ளதாதலாலும் நம்பிக்கைப்பொறுப்புச்சபை அதனைக் கூட்டிணைக்க விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக் கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, சிஹல சரண பின் கெட்டய நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் சிஹல சரண பின் கெட்டய நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் (இதனகத்துப்பின்னர் "நம்பிக்கைப்பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தற்போது அங்கத்தவர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப் படவேண்டியவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "சிஹல சரண பின்கெட்டய நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமை கொண்ட

சிஹல சரண பின்கெட்டய நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைத்தல்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது -

(அ) பயங்கரவாதத்திற்கு, இனரீதியிலான வன்செயலுக்கு, அல்லது ஏதேனும் சாதி பாகுபாட்டிற்கு அல்லது கலகத்திற்கும் பலியாக்கப்பட்டவர்களான பௌத்தர் களுக்கு நிவாரணம் வழங்குதல் ;

(ஆ) இலங்கையிலுள்ள பௌத்தர்களின் ஒழுங்குணர்வு, கலாசார, பொருளாதார சமூக நலம்பேணலை முன்னெடுத்துச் செல்லுதல் ;

(இ) இலங்கையின் பௌத்த கலாசார மரபுரிமையையும் தொல்பொருளியல் முக்கியத்துவம்வாய்ந்த இடங்களையும் பேணிக்காத்தல் ;

(ஈ) சிங்கள மொழி, கலாசாரம், வரலாறு என்பன பற்றிய ஆராய்ச்சியை ஊக்குவித்தலும் அதற்கு வசதியளித் தலும் ;

(உ) பௌத்த மதத்தின் நலன்களை ஊக்குவித்தல் ;

(ஊ) தேரவாத பௌத்த மதக் கோட்பாட்டையும் வாழ்க்கை முறையையும் பேணிவளர்த்தல் ;

(எ) பௌத்த மதத்தின் கற்கைக்கு வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஏ) பௌத்த மதத்தை, செயல்முறை அனுஷ்டானத்தை ஊக்குவித்தல் ;

(ஐ) பௌதத் ஒழுங்கமைப்புகள் மற்றும் பௌத்தர்கள் மத்தியில் தேசிய ரீதியிலும் சர்வதேசரீதியிலும் ஐக்கியத்தையும் ஒத்துழைப்பையும் ஊக்குவித்தல் ;

(ஒ) பௌத்தர்களுக்கு நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஓ) அவசியமான பௌத்தர்களுக்கு கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வசதிகளை ஏற்பாடுசெய்தல் ;

(ஔ) கமத்தொழில், கைத்தொழில் அல்லது வர்த்தகத் தொழில்முயற்சிகளைத் தொடங்குவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் பௌத்தர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்குதல் ; அத்துடன்

(க) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடைய ஏனைய கழகங்களுடன், சங்கங்களுடனும் அல்லது ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச்செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய தத்துவங்களுள் பின்வருவனவும் அடங்கும் :-

(அ) வங்கிக்கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற்படுத்துதல் ; அத்துடன் மூடிவிடுதல் ;

(ஆ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொன்றி பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல் ;

(இ) மானியங்களையும், நன்கொடைகளையும் பெறுதல் அல்லது திரட்டுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தால் உடனடியாகத் தேவைப்படுத்தப் படாத நிதிகளை முதலீடு செய்தல் ; அத்துடன்

(உ) அலுவலர்களையும் சேவையாளர்களையும் அமர்த்து தல், தொழிலில் ஈடுபடுத்துதல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தினதும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கிணங்கத் தெரிவுசெய்யப்படவுள்ள ஏழுக்கு மேற்படாதவர்களும் ஐந்துக்குக் குறையாதவர்களுமான உறுப்பினர்களைக்கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப்பொறுப் பாளர் சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப் பாளர் சபையாதல் வேண்டும்.

*நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவராக இருப்பதற்கான தகைமையீனம்.*

**6.** ஆளொருவர் –

(அ) ஒரு பௌத்தராக இல்லாதிருப்பின் ;

(ஆ) முப்பது வயதுக்குக் குறைந்தவராக இருப்பின் ;

(இ) நீதிமன்றம் ஒன்றினால் வங்கிமுறிந்தவராக அல்லது கடனிறுக்க இயலாதவராக வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராக இருப்பின்;

(ஈ) சித்தசுவாதீனமற்றவராக இருப்பின் ; அல்லது

(உ) ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட ஏதேனும் தவறு புரிந் துள்ளவராகத் தகுதிவாய்ந்த ஏதேனும் நீதிமன்றத் தால் வெளிப்படுத்தப்பட்டிருப்பின்,

அத்தகைய ஆள் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் உறுப்பின ரொருவராகப் பணியாற்றுவதற்குத் தகைமையுடையவராத லாகாது.

**7.** (1) நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் ஏதேனும் கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் எல்லா அல்லது எவையேனும் கருமங் களுக்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும் :- கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், அவர்கள் விலகுதல், அவர்களை விலக்குதல் அத்துடன் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் வெற்றிடங்களை நிரப்புதல் ;

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையினதும் கூட்டுத்தாப னத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களின தும் அத்துடன் சேவையாளர்களினதும் கடமைகள் ;

(இ) நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் கூட்டங்களில் அனுசரிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறையும் அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண்ணும் ; அத்துடன்

(ஈ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதேபோன்று கூட்டத்தில் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) எல்லா நம்பிக்கைப்பொறுப்பாளர்களும் கூட்டுத்தாப னத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

**8.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று நம்பிக்கைப் பொறுப்பிற்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத் தாபனத்தின் தனிசுகள் மற்றும் பொறுப்புக்களாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இத்தால் அமைத்துருவாக் சங்கத்தால் செலுத்தப்பட வேண்டியவையும் சங்கத்திற்குச் செலுத்தப்படற்

பாலனவுமான தனிசுகள்.

கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தினத்தன்று நம்பிக்கைப்பொறுப்பிற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படற்பாலதான தனிசுகள் மற்றும் உதவுதொகைகளாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9.** (1) கூட்டுத்தாபனம் நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அதில் பின்வருவன அடங்குதல் வேண்டும் :-

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று நம்பிக்கைப்பொறுப்பின் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும் ;

(ஆ) நன்கொடை ஆதனக்கையளிப்பு, நன்கொடை ஒப்பப் பணம் அல்லது மானியக்கொடை என்றவகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும்.

(2) நிதியத்தில் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதிலும் அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதிலும் உறப்பட்ட செலவுகளை ஈடுசெய்வதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

கணக்காய்வும், கணக்குகளும்.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காளர்" என்பது –

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றது மான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

***11***. கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, நன்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையான அதற்கு உரித்தாக்கப்படும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத்தத்துவ முடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத் தின் இலச்சினை.*

***12***. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை நம்பிக்கைப்பொறுப் பாளர் சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிற் தவிர சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாகத் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராக கையொப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதல் வேண்டும்.

*கலைக்கப்பட்ட தன்மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கொடுத்துத்தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அல்லது உடையனவும் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளவையுமான வேறு நிறுவனம் அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தில அடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்களம், தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்